Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 27 (12-12-1992) சனிக்கிழமை ஓசை 298

## அகதிகளுக்கு நிவாரணம் விநியோக முறையில் மாற்றம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச நிவாரண விநியோகம் அவர்களின் சொந்த இடங்களைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் மேற் கொள்ளப்பட இருக்கின்றது. நேற்றுக்காலை யாழ் செயலகத்தில் நடைபெற்ற 'இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம்' சம்பந்தமான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ் குடாநாட் டின் பல பாகங்களிலும் முகாம்களில் தங்கியுள்ள தீவக மக்களுக்கான நிவாரணம் தீவகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் மேற்கொள்ளப்படும். அதே போன்ற ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## அன்னையர் முன்னணி மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் அன்னையர் முன்னணியினர் மீது பொலிசார் மேற் கொண்ட தாக்குதலைக் கண்டித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும், தொழிற்சங்கத் தலைவர் களும் இணைந்து நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இதில் எதிர்க்கட்சி களைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் காணாமல் போனோரின் பெற்றோர் களால் டிமெல் மைதா னத்தில் நடாத்தப்பட்ட உண்ணாவிரதத்தை தடுக்கும் நோக்குடன் பொலிசார் அவர் கள் மீது குண்டாந்தடி பிர யோகத்தையும் கண்ணீர்புகை களையும், ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக் களையும் தீர்த்தமை தெரிந் ததே. பொலிசாரின் இச்செய லுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே மகிந்தராஜபக்ச தலைமையில் நடாத்தப்பட்ட இவ் ஊர்வலத்தில் 50ற்குமேற் பட்ட பாராளுமன்ற உறுப்பி னர்களும் தொழிற்சங்க தலை வர்களும் கலந்து கொண்ட னர்.

இதேவேளை மனித உரிமை கள் மீறல் தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த அன்னையர் முன்னணியர் கூட்டத்தை குண்டாந்தடி பிரயோகம்கண்ணீர்ப்புகைக் குண்டு, எச்சரிக்கை துப்பாக்கி வேட்டுகளை தீர்த்து குழப்பிய கலவர அடக்கும் பொலிசாரு க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாகஎதிர்க்கட்சி கள் தெரிவித்தன.

ஜனநாயகரீதியில் இவர்கள் நடத்திய போராட்டத்தை பொலிசாரும், அரசாங்க குண் டர்களும் தடுத்து நிறுத்தியது ஒரு ஜனநாயக விரோத நடவ டிக்கை என்றும், இவ்வாறு ஒடுக்கு முறைகளை அரசாங் கம் கைக் கொள்ளுமாயின் இதன் விளைவு பாரதூரமான முடிவைஏற்படுத்தும்என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்று அதன் அமைப்பாளர் களான வாசுதேவ நாணயக் கார, மகிந்த ராஜபக்ச ஆகி யோர் மனித உரிமை சங்கத் திற்கு புகார் செய்ய இருப்ப தாக தெரிவித்துள்ளனர்.

மேலும் பாராளுமன்ற அங்க த்தவர்களின்சிறப்புரிமைகளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## எம்பிலிப்பிட்டியாவில் டிசம்பர் 31-ம் திகதியன்று கறுப்பு ஊர்வல ஏற்பாடு

(கொழும்பு)

1990-ல் எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் காணாமற்போனமை தொடர் பாக பெற்றோர்கள் இம்மாத

வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்படுவதுடன் அரசாங்க ஊழியர்கள் வேலைக்கு செல் லக்கூடாது எனவும் தனியார் அரசு போக்குவரத்துகள் முற்றாக நடைபெறக் கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

## உணவுப் பொருள் இறக்கப்படவில்லை

(வடமராட்சி)

கடலில் ஏற்பட்ட அசாதா ரண சூழ் நிலையால் பருத்தித் துறை இறங்குதுறையில் கப்ப லில் இருந்து உணவுப் பொரு ள்கள் இறக்கும் வேலைகள்

## சம்பள முற்பண கடன் ஆசிரியருக்குகிடைக்கும்

ஆறுமாத சம்பள முற்பணக் கடன்களுக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்ட ஆசிரியர்க ளுக்கும் கல்வித் திணைக்களத் தைச் சேர்ந்த உத்தியோகத் தர்களுக்கும் இக் கடன்களை வழங்க யாழ் கல்வித்திணைக் களம் திடீர் நடவடிக்கை எடுத் துள்ளதாக தெரிவிக்கப்படுகி றது. இக் கடன்களை தமது அறிவித்தல் இல்லாமலும் கட்டு நிதியைப் பெறாமலும் வழங்கக் கூடாது என வட கிழக்கு மாகாண கல்வி அமை ச்சு யாழ்.கல்வித் திணைக்கள த்துக்கு அறிவித்திருந்தது இத னால் இக் கடனைக் கோரி விண்ணபயம் அனுப்பிய ஆசி ரியர்கள் இதுவரை இக் கட னைப் பெறமுடியாமல் இருந் தது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கல்வித்திணைக்களம் விண்ணப்பம் அனுப்பவில்லையாம்

(நமது நிருபர்)

யாழ். கல்வித்திணைக்களத் தின் அசமந்தப் போக்கினால் கனிஷ்ட தொழில் நுட்ப சான் றிதழ் பரீட்சைக்கு தோற்ற முடியாது கடந்த இரண்டு வரு டங்களாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் விரக்தியடைந் துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் முதல்தடவையாக கடந்த வரு டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு 9 மாணவர்களுக்கான மேற்படி சான்றிதழுக்கான பரீட்சை கிளிநொச்சி மாவட் டம் உட்பட எல்லா மாவட் டங்களிலும் நடைபெற்றது. ஆனால் யாழ் மாவட்டத்தில் மட்டும் இப்பரீட்சை நடை பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆண்டு 9 மாணவர் களுக்கு நடைபெற வேண்டிய இப்பரீட்சை விசேடபரீட்சை யாக 1991 டிசம்பரில் நடை பெறும் என யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்திருந் தது. ஆனால் பின்னர் அப் பரீட்சைக்கான வினாத்தாள் கள் தயாரிக்கப்படவில்லை எனக் காரணம் கூறப்பட்டது.

மீண்டும் இவ்வாண்டு ஆகஸ்ட் டில் விசேட பரீட்சையாக நடைபெறும் என திணைக்க ளம் அறிவித்தது. ஆனால் கடந்த ஆகஸ்டிலும் அது நடைபெறவில்லை பின்னர் கடந்த நவம்பரில் இவ்வாண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ள ஆண்டு 9 மாணவர்களின் ரீட் சையுடன் டிசம்பர் 17-ம் திகதி தற்போது ஆண்டு 10 இல் கற் கும் மாணவர்களுக்கும் இப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அடையாள அட்டை தேவையில்லை

ஆண்டு 9-க் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சை எழுது வதற்கு அவர்களுடைய அடை யாள அட்டையோ, புகைப் படங்களோ அத்தியாவசிய மில்லை என யாழ். கல்வித் திணைக்களப் பரீட்சைப்பகுதி தெரிவித்துள்ளது.

## சிறுவர் பிரிவிலும் மருந்து தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் சிறுவர் பிரிவில் முக்கிய மருந்தாகிய டெகிலோ றேஸ் 5வீதம் மற்றும் பிளாஸ் டர், வெல்டிலோன் என்பவற் றிற்குத் தட்டுப்பாடு நிலவுவ தாகவும் இவற்றை வெளியே தனியார் மருந்துச் சாலை களில் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆஸ்பத் திரி வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

பலவீனமடைந்த நிலையில் காணப்படும் சிறுவர்களுச்குப் பாவிக்கப்படும் இந்த மருந்துக் குத் தட்டுப்பாடு நிலவுவதால் சிறுவர் நோய் பரவிவரும் இக் காலகட்டத்தில் பெற்றோர் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

## நொச்சிமோட்டையில் படையினர் மீது புலிகள் தாக்கு

...வத்தில் நடாத்தப்பட்ட உண்ணாவிரதத்தை தடுக்கும் நோக்குடன் பொலிசார் அவர்கள் மீது குண்டாந்தடி பிரயோகத்தையும் கண்ணீர்ப்புகைகளையும், ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்தமை தெரிந்...

இவ் ஊர்வலத்தில் 50க்குமேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் தொழிற்சங்க தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த...

...வேட்டுகளை தீர்த்து குழப்பிய கலவர அடக்கும் பொலிசாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

ஜனநாயகரீதியில் இவர்கள் நடத்திய போராட்டத்தை பொலிசாரும், அரசாங்க குண்டர்களும் தடுத்து நிறுத்தியது...

...இதன் விளைவு பாரதூரமான முடிவை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்று அதன் அமைப்பாளர்களான வாசுதேவ நாணயக்கார, மகிந்த ராஜபக்ச ஆகியோர் மனித உரிமை சங்கத்திற்கு புகார் செய்ய இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் சிறப்புரிமைகளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

...அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு 9 மாணவர்களுக்கான மேற்படி சான்றிதழுக்கான பரீட்சை கிளிநொச்சி மாவட்டம் உட்பட எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றது. ஆனால் யாழ் மாவட்டத்தில் மட்டும் இப்பரீட்சை நடை...

...எனக் காரணம் கூறப்பட்டது.

...கும் மாணவர்களுக்கும் இப

[4 ஆம் பக்கம் பார்க்க]

எம்பிலிப்பிட்டியாவில்

# டிசம்பர் 31-ம் திகதியன்று கறுப்பு ஊர்வல ஏற்பாடு

(கொழும்பு)

1990-ல் எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் காணாமற்போனமை தொடர்பாக பெற்றோர்கள் இம்மாதத்தை கறுப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தமை தெரிந்ததே. இந்த வகையில் இந்த ஆண்டின் இறுதி நாளான டிசம்பர் 31-ம் திகதியை கறுப்புஊர்வலதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

அன்றைய தினம் அனைவரும் கறுப்பு பட்டியை அணிய வேண்டும் என்றும், கடைகள், வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்படுவதுடன் அரசாங்க ஊழியர்கள் வேலைக்கு செல்லக்கூடாது எனவும் தனியார் அரசு போக்குவரத்துகள் முற்றாக நடைபெறக் கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

# கலவரம் அடக்கும் பொலிஸ் உண்டாக்கிய கலவரம்

## -ராய்ட்டர் கருத்து

கலவரத்தை அடக்கும் பொலிசாரே கலவரத்தை உண்டாக்கினர் என நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ராய்டர் செய்தியாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப் பொருள் இறக்கப்படவில்லை

(வடமராட்சி)

கடலில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையால் பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று நடைபெறவில்லை.

'பெரினால்' கப்பலில் இன்னமும் மூன்று தினங்களுக்கான உணவுப் பொருள்கள் இறக்க வேண்டியுள்ளன. கடலில் கால நிலைசீரற்று இருப்பதால் உணவுப்பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன. (யோ)

# அடையாள அட்டை தேவையில்லை

ஆண்டு 9-க் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு அவர்களுடைய அடையாள அட்டையோ, புகைப்படங்களோ அத்தியாவசியமில்லை என யாழ். கல்வித் திணைக்களப் பரீட்சைப்பகுதி தெரிவித்துள்ளது.

அவ்வப் பாடசாலைகளைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்கள் தமது மாணவர்களைப் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்துச்செல்லலாம் எனவும் யாழ் கல்வித்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (17)

# சிறுவர் பிரிவிலும் மருந்து தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் சிறுவர் பிரிவில் முக்கிய மருந்தாகிய டெக்லோரேஸ் 5 வீதம் மற்றும் பிளாஸ்டர், வெல்டிலோன் என்பவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இவற்றை வெளியே தனியார் மருந்துச் சாலைகளில் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பலவீனமடைந்த நிலையில் காணப்படும் சிறுவர்களுக்குப் பாவிக்கப்படும் இந்த மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் சிறுவர் நோய் பரவிவரும் இக்காலகட்டத்தில் பெற்றோர் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

# நொச்சிமோட்டையில் படையினர் மீது புலிகள் தாக்கு

நொச்சிமோட்டைப் பகுதியில் பதுங்கியிருந்து தாக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் நொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவ காவலரணிலிருந்து 150 யார் முன்பாக விடுதலைப் புலிகள் சென்றுகொண்டிருந்தனர்.

இதன்போது இவர்களைத் தாக்குவதற்கென இராணுவத்தினர் பாதையின் அருகே தயாராக பதுங்கியிருந்தனர். இதனைக் கண்டு விடுதலைப் புலிகள், இராணுவத்தினர் மீது திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலினால் இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

# சமஷ்டியே சிறந்த தீர்வு தெரிவுக்குழுவிற்கு தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறையே மிகச் சிறந்த தீர்வு என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அத்தாவுட செனவிரத்தினா கூறியுள்ளார். மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேலும் தனிநாடு கோரும் பகுதிக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கு மிகச் சிறந்த உரிய முறை சமஷ்டி ஆட்சியாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக ஆலோசனைக் கூட்டங்களை அதிகாரிகள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் அத்தியாவசிய, அடிப்படை தேவைகளை சீரமைப்பதற்கு இம் மாவட்டத்தின் சில அரச திணைக்களத் தலைவர்கள் அக்கறையின்மையாக செயற்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

மேற்படி விடயமாக யாழ். மாவட்டத்தின் அரச செயலகத்தில் நடாத்தப்படும் கூட்டங்கள் அல்லது சந்திப்புகள் ஆகியவற்றுக்கு மேற்படி திணைக்களத் தலைவர்கள் சமுகமளிப்பதில்லை எனவும்.

தமக்குப் பதிலாக பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைப்பது இவர்களது வழக்கமாகிவிட்டது எனவும் தெரியவருகின்றது. இவ்வாறான வழக்கத்தை முக்கிய அரச திணைக்களங்களான கல்வி, சுகாதாரம் ஆகியவை உட்பட பல அரச திணைக்களங்கள் ஒழுங்காகப் பின்பற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றையும் சில முக்கிய அரச திணைக்களத் தலைவர்கள் வழக்கம்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளை அடையாளம்காண கொழும்பில் தலையாட்டிகள்

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்ட சுமார் 1500க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் தலையாட்டிகள் முன் நிறுத்தப்பட உள்ளனர்.

இதன் முதல் கட்டமாக சுமார் நூறு பேர் நேற்று கொழும்பில் முகமூடிகள் முன்னிலையில் அடையாளம் காணுவதற்கென நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் சுமார் 10 பேரை தலையாட்டிகள் அடையாளம் காட்டியதை தொடர்ந்து அவர்கள் வேறுபடுத்தி கொண்டு செல்லப்பட்டனர். ஏனைபேர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கொழும்பில் தலையாட்டிகளை பயன்படுத்தியது இது தான் முதல் தடவை என ஏ. எவ் பி செய்திதாபனம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர்களை பொறுத்தவரை தெரிவுக்குழு குலைந்துவிட்டது

## -தமிழ் பா. உ தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு எவ்வித உடன்பாட்டுக்கும் வர முடியாமல் தோல்வியில் முடிவடைந்தது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டம் நேற்றுக் கூடியது.

தமிழர்களைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தெரிவுக் குழு குலைந்து விட்டது என்று ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் ஆளும் கட்சியான யு. என். பி. யும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சமஷ்டி முறையிலான அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்ள ஒத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் சென்னார்.

# குழந்தைகளுக்கான பாலுணவு கூட்டுப்படை தடை விதிப்பு

## மூக்குக்கண்ணாடி எடுத்து வரவும் மறுப்பு

(நமது நிருபர்)

வடபகுதிக்குத் தேவையான போசாக்கு உணவு மற்றும் குழந்தைகளுக்கான பாலுணவு வகைகளை எடுத்து வருவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது. இதனால் பல மாதங்களாக இவை கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகளைச் சந்தித்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் மேற் கண்ட தகவலை தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து முகாங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்க மனித முன்னேற்ற நடு நிலையம் கொள்வனவு செய்த உலர் உணவுப் பொருள்களை இங்கு எடுத்துவர அனுமதி வழங்க கூட்டுப்படை தலைமையகம் மறுத்துள்ளது. இதனால் 50 மெற்றிக் தொன் உலர் உணவு கடந்த இரண்டு மாதங்களாக கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன. இவை முகாம்களுக்கும் வேறு நிவாரண உதவிகளுக்காகவும் வழமையாக எடுத்து வரப்படுவது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை லயன்ஸ் கழகத்தினர் யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கு வழ

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# தமிழ்நாடு அகதிகள் யாழ். செல்ல தடையில்லை

## – பி. தயாரத்தினா

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் வந்தவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு சிறிலங்கா அரசு எந்தத் தடையையும் விதிக்கவில்லை என்று புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் துறை அமைச்சர் பி. தயாரத்தினா தெரிவித்தார் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும்போது அவர் இவ்விதம் குறிப்பிட்டார்.


## புளொக் தயாரிப்பாளர் தேவை

"புளொக்" தயாரிப்பாளர்கள் தேவை. அனுபவமும், திறமையும் உள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு எமது அலுவலகத்துக்கு நேரடியாகச் சமுகம் தரவும்.

கடமைக்கான சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
ஈழநாதம்

## வரி விளம்பரம்

### வாடிக்கையாளருக்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5510)

### பற் சிகிச்சை நிலையம்

(எஸ். பி. சாமி அன்கோ கட்டிடம்) யாழ். பஸ் நிலையம் அருகில் பார்வையிடும் நேரம் தினசரி 12.00 ந.ப - 2.00 பி.ப. (3230)

## ஆறுமுகநாவலர் நூல்வெளியீடும் குருபூசையும்

சைவப்பெரியார் சு. சிவபாசுந்தரம் அவர்கள் எழுதிய ''ஆறுமுகநாவலர்'' என்னும் ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. அன்று காலை ஒன்பது மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், மண்டபத்திலும், தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மண்டபத்திலும் நடைபெற இருக்கும் இரு வெவ்வேறு நிகழ்ச்சிகளில் இந் நூல் வெளியிட்டு வைக்கப்பட இருக்கிறது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மண்டபத்தில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளில் வெளியீட்டாசிரியர் சொக்கலிங்கம், இந்துக்கல்லூரி அதிபர் பஞ்சலிங்கம், மத்தியகல்லூரி அதிபர் சண்முகநாத பிள்ளை, வேம்படி மகளிர்கல்லூரி அதிபர் இ. இராசரத்தினம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இதேவேளை துர்க்கா தேவி கோவில் மண்டபத்தில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளில் இளைப்பாறிய அதிபர் ந.சபாரத்தினம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

### கலை நிகழ்ச்சிகள்

அரியாலை சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலை சிறார்கள் வழங்கும் கலை நிகழ்ச்சியொன்று இன்றுமாலை ஐந்து மணியளவில் இடம் பெறவுள்ளது. அமரர் காசிப்பிள்ளை அரங்கில் நடைபெற இருக்கும் இந் நிகழ்ச்சியில் கலைஞர் என் எஸ். லோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

### சங்காபிஷேகம்

பொன்னாலை சிறீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் செவ்வாயன்று நவோத்திர சங்காபிஷேகம் நடாத்தப்பட இருக்கிறது.

## தேவை

வைத்தியகலாநிதி M. B. B. S. தேவை, சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:
மூளாய் கூ. வைத்தியசாலை சங்கம்,
மூளாய்

(சி-5568)

## அறிவித்தல்

### வடஇலங்கைச் சங்கீதசபைப் பரீட்சைகள் - 1993

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்களும், அறிவுறுத்தல்களும் சபைப் பணிமனையில் 14-12-1992 திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா 10/ பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 29-01-1993 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. சுந்தரலிங்கம்
யாழ்.மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத்தலைவரும்

(சி/5573)

தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

## முக்கிய அறிவித்தல்

பங்குப்பணம் ரூபா 100/- : 6-3-1992 இல் திருத்தி

## யாழ். வைத்தியசாலையில் மட்டும் 7 மாதத்தில் 205 சிறுவர்கள் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சுமார் 205க்கு மேற்பட்ட சிறுவர்கள் கடந்த 7 மாதங்களில் நோய் காரணமாக மரணம் அடைந்துள்ளனர்

கடந்த மே மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையும் யாழ். போதனா மருத்துவ மனையில் மட்டும் சுமார் 3611 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் வயிற்றோட்டம் காரணமாக சுமார் 1512 பேரும் மலேரியா நோயினால் சுமார் 36 பேரும் ஏனைய நோய் காரணமாக சுமார் 512 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சுமார் 205 சிறுவர்கள் மரணம் அடைந்துள்ளனர். இதில் சுமார் 25 சிறுவர்கள் வயிற்றோட்டத்தினாலும் ஏனைய நோய் காரணமாக 180 சிறுவர்களும் மரணம்அடைந்துள்ளதாக யாழ். போதனா சாலை சிறுவர்கள் மருத்துவ பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இதனைவிட ஏனைய தனியார் மருத்துவ மனைகளிலும் அரசாங்க மாவட்டமூலாதார மருத்துவமனைகளிலும் சுகாதார அத்தியட்சகர் பிரிவுகளில் உள்ள மருத்துவ மனைகளிலும் பல சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பலர் இறந்து இருக்கலாம் என சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோய் காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டுவரும் போது பல சிறுவர்கள் இறந்துள்ளனர் இவர்கள் இந்தக் கணிப்பின்கீழ் வரவில்லை. எனவே இது தொடர் பாக முழுவிபரத்தைப் பெற முடியாது இருப்பதாக சுகாதார வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### இலட்சார்ச்சனை விழா

கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் கதையை முன்னிட்டு 21 நாட்களுக்கு இலட்சார்ச்சனையும், விநாயகர் புராண படனம் படித்தலும் இடம் பெறும்.

### விநாயகவிரதம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயக விரதத்தை முன்னிட்டு விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்கு காப்புக் கட்டுதல் கடந்த வியாழனன்று இடம் பெற்றது. தொடர்ந்து இருபது நாட்களுக்கு விசேட பூசையும் விநாயக புராண படனம் படித்தலும் நடைபெற்றுவருகிறது.

### கண்காட்சி நிறைவு

புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தொழில் நுட்ப அழகியல் பொருட்காட்சியை வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் உள்ள 23 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள் பார்வையிட்டு பயன் பெற்றுள்ளனர். இவ்வாண்டில் வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் இடம் பெற்ற ஒரேயொரு பூரணமான தொழில் நுட்ப அழகியல் பாடப் பொருட்காட்சியாக இப் பொருட்காட்சி அமைந்திருந்தது (25)

### கொட்டகலையிலேயே பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கொட்டகலையில் இம்மாதம் 17ஆம் திகதி நடைபெற இருக்கும் பட்டதாரிகள் பயிற்சி நெறி திட்டமிட்டபடி நடைபெறும் என கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியினை எக்காரணம் கொண்டும் பிற்போட முடியாதென கல்வி அமைச்சின் செயலாளர் யாழ் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார். இதனை யாழ். அரச அதிபர் மேற்படி பயிற்சி நெறியுடன் தொடர்புடையவர்களுக்கு அறிவித்துள்ளார்.

### சேவை நலம் பாராட்டு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இந்து வித்தியாலய உப அதிபர் திருமதி ச நடராஜா இருபது வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி வித்தியாலய அபிவிருத்திச் சபை அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் சேவை நலம் பாராட்டு விழா வொன்றை நடத்தினர். (25)

### அவசர கூட்டம்

தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று திங்களன்று காலை பத்து மணியளவில் பட்டப்படிப்பு கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பாக்கிச் சம்பளம் பெறுதல், நிரந்தர நியமனம் கோருதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகலரையும் சமுகம் தரும்படி தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கோரியுள்ளார்.

### கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் பொதுசன மாதா

### டிசம்பர் மாத ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் விநியோகிக்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான கட்டு நிதியை திறைசேரியாழ். அரச அதிபரின் பெயரில் கொழும்பில் வங்கிக் கணக்கொன்றில் செலுத்தியுள்ளது இதனை யாழ். வங்கிக் கணக்கிற்கு மாற்றியதும் ஒய்வூதியக்காரர்கள் தங்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (பர)

## விருந்தி முகாமையாளர் பொலிசாரால் கைது

திருக்கோணமலை நகருக்கு வடக்கே மூன்று மைல் தொலைவுப் பகுதியில் இருக்கும் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றின் பொதுமுகாமையாளரும், பிரதம சமையல்காரரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுமார் 75 லீற்றர் பெற்றோல் பதுக்கி வைக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டதை தொடர்ந்து. இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்குமிடையே தொடர்புகள் இருக்கலாமென பொலிசார்நம்புவதாகவும் மேலும் கூறப்படுகிறது

## கஷ்டப் பிரதேச நியமனம புதிய திட்டம் பரிசீலனையில்

நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளுக்கு அதிபர்களையும் ஆசிரியர்களையும் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

இதற்கு வசதியாக புதிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு கல்விச் சேவைகள் அமைச்சு ஆலோசித்து வருகிறது மேற்படி பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டும் அங்குள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படவுள்ளது. இடமாற்றம் செய்யப்படமாட்டாது என்ற நிபந்தனையின்கீழ் இந்த நியமனங்கள் வழங்கப்படவிருக்கிறது தற்பொழுது நாடு முழுவதிலும் சுமார் 300 க்கும்மேற்பட்ட பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாமல்சீராக இயங்க முடியாதுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக நியமனம் பெற்றோர் நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

தற்காலிக ஆசிரியர்களாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட சுமார் நான்காயிரத்து எழுநூறுக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட இருப்பதாக கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

1989-ல் ஆசிரிய சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் தொண்ணூற்று ஒன்பது சதவீதமானோர் வெளிவாரிப் பட்டதாரிகள் என்று கல்விச் சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் திவயின பத்திரிகைக்கு தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்...

1992-12-12

மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, பண்டத்தரிப்புக் கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## இரு பெண்கள் கைது

வெளிநாடு செல்ல இருந்த இரு பெண்கள் மலையகத்தில் உள்ள தமது உறவினர்களுக்கு பயணம் சொல்வதற்காக மலையகம் சென்ற போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளத் சிங்கள என்ற பகுதியில் வைத்தே இந்த இரு பெண்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்களைக் கைது செய்ததாக பொலிசார் கூறினர்.

## கொழும்பில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1992 செப்டம்பர் 18 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபடி சேவையில் உள்ள கணக்குப்பதிவாளர்கள் வகுப்பு 11 ஆம் தரத்தின் ''அ'' பிரிவிற்கு பதவி உயர்வு பெறுவதற்கான பொதுஅரசசேவை / மாகாண அரச சேவைக்கான பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் மட்டுமே நடைபெற உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (பா)

## தொழிலாளர் கற்கை நெறி ஆரம்பம்

யாழ் பல்கலைக் கழகத்தின் மூலம் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயிற்சி நெறியைப் பயிலுவதற்கான புதிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி விரிவுரைகள் 16.01.93 சனிக்கிழமை ஆரம்பமாக உள்ளதாக யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பயிற்சி நெறியைப் பயில தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான பதிவு 04.01.93 திங்கட்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகத்தில் நடைபெறும் எனவும், முன்னர் நேர்முகப் பரீட்சையில் பரிசீலனை செய்யப்பட்ட புதிய மாணவர்களின் கல்வித் தகைமைச் சான்றிதழ். தொழிற் தேர்ச்சி சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ் ஆகியவைகளின் மூலப் பிரதிகள் மீளவும் பரிசீலனை செய்யப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார். (17)

அறிவுறுத்தல்களும் சபைப் பணிமனையில் 14-12-1992 திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை ரூபா 10/ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 29-01-1993 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. சுந்தரலிங்கம்
யாழ்.மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத்தலைவரும்

(சி/5573)


தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

## முக்கிய அறிவித்தல்

பங்குப்பணம் ரூபா 100/- : 6-3-1992 இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/ ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழு தேர்தலிலோ பொதுச் சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது எனவே 05-03-1993க்கு முன்னர் தங்கள் பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக ஆக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர் தலைவர்
(சி-5567)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 25 | 06 | 1941



அஸ்தமனம் 12 | 12 | 1991

## திருமதி ஞா. சிசீலியா சிவக்கொழுந்து

(இளம்பில் மணலாறு)

அன்பின் திருவுருவமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமக்காகவும், நாட்டுக்காகவும், வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களைப் பிரிந்து ஓராண்டென்ன பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

கணவன்: மி. ஞானமுத்து
(மேற்பார்வையாளர் துறைமுக அதிகாரசபை)
பிள்ளைகள்: ஜெபநேசன், சியாமளா, மஞ்சுளா ஷர்மிளா.
(3758)

காட்சி அமைந்திருந்தது (25)

## கொட்டகலையிலேயே பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கொட்டகலையில் இம்மாதம் 17ஆம் திகதி நடைபெற இருக்கும் பட்டதாரிகள் பயிற்சி நெறி திட்டமிட்டபடி நடைபெறும் என கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியினை எக்காரணம் கொண்டும் பிற்போட முடியாதென கல்வி அமைச்சின் செயலாளர் யாழ் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார். இதனை யாழ். அரச அதிபர் மேற்படி பயிற்சி நெறியுடன் தொடர்புடையவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## அனுமதி பத்திரங்கள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய தராதரப்பத்திர இறுதிப் பரீட்சை எமதும் ஆசிரிய மாணவர்கள் தமது பரீட்சை அனுமதிப்பத்திரங்களில் கையொப்பமிடுவதற்காக கலாசாலைக்கு 14 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## விடத்தல் தீவில் எறிகணை வீச்சு

(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவு மக்கள் வாழ்விடங்களை நோக்கி இரவுவேளை சிறிலங்கா இராணுவம் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது.

கடந்த 9 ஆம் திகதி தள்ளாடி இராணுவ முகாமிலிருந்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதனால் இப்பகுதியில் இரண்டு வீடுகள் சேதமாகின.

தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்றைய காலை பத்து மணியளவில் பட்டப்படிப்பு கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பாக்கிச் சம்பளம் பெறுதல், நிரந்தர நியமனம் கோருதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் சகலரையும் சமுகம் தரும்படி தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கோரியுள்ளார்.

## கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக வேலணை உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவு பெறுவோர் அவரவர் பகுதி கிராம சேவகர் பிரிவுகளில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது.

## விவசாயிகளுக்கு உதவி

தென்மராட்சி பகுதியில் 1.400 நெற் செய்கையாளர்களுக்கு யு. எஸ் கெயர் எயிட் திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப் போராட்டக்குழுவினரால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது உரப்பசளை இந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது மேலும் மண்வெட்டி மற்றும் உழவு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.


## மலிவு விற்பனை

[Clearing Sale]

★ ஆண்டு-6 அனுமதிப் பரீட்சை

★ O/L

★ A/L விஞ்ஞானபாடங்கள்

50வீத சிறப்புக்கழிவு விலையில் மேற்படி வகுப்புக்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**

யாழ்ப்பாணம் (சி-5575)


## நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

தற்காலிக ஆசிரியர்களாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட சுமார் நான்காயிரத்து எழுநூறுக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட இருப்பதாக கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

1989-ல் ஆசிரிய சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் தொண்ணூற்று ஒன்பது சதவீதமானோர் வெளிவாரிப் பட்டதாரிகள் என்று கல்விச் சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தினயின பத்திரிகைக்கு தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-12

1985-ம் ஆண்டு இதே தினத்தில் காங்கேசன்துறைப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடி குண்டு விபத்தில் எமைப்பிரிந்த-

★ கண்ணன் (க. பார்த்தீபன் - கொழும்பு)

★ குட்டி (ப. விஜயரஞ்சன் - கோண்டாவில்-யாழ்)

1987 ஆம் ஆண்டு மட்டு - தளவாய்க் கடற்கரையில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட -

உதயன் (நாராயணன் உதயச்சந்திரன் - கொக்குவில் மட்டு.)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

முகமட் (தங்கராசா பரமேஸ்வரன் வல்வெட்டித்துறை - யாழ்.)

பேருந்தில் வவுனியா செல்கையில் இந்தியப்படையினர் கைது செய்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

விமலன் / தந்தோம் (இராசரத்தினம் விமலசிங்கம் மானிப்பாய் - யாழ்.)

1988-ம் ஆண்டு குமுழமுனை- நந்தபுரம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

யோகன் (மாசிலாமணி யோகேஸ்வரன்- குமுழமுனை- மணலாறு)

தமிழகக் கடலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப்பிரிந்த-

லெப். சிவகரன் (செல்லத்துரை ஜெறாட் ஜெயந்திரன்- 26/2, புனித ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர்- யாழ் )

திருக்கோணமலையில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 9- தமிழர்கள்.

யாழ்ப்பாணம், மயிலிட்டிப் பகுதிகளில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 2- தமிழர்கள்.

1990-ம் ஆண்டு மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட- தளவாய், செங்கலடி- 2 பகுதிகளைச் சேர்ந்த 2- தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5574]

சிந்தனைக்கு

சாட்டுச் சொல்லாதே
சாதனை புரி.
— ஃபிராங்க் மெக்சினி ஹப்பர்ட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 12-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் ...05

# அரசின் போக்கில் மாற்றமில்லை

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற்தீர்வு காண சிறிலங்கா அரசாங்கம் தயாராகவில்லை எனக் கொழும்பிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இராணுவத்தை நவீனப்படுத்துவதன் மூலம் போர் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்கி இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே அரசு அக்கறை காட்டுவதாகவும் அறியவருகின்றது.

சுமார், பதினைந்து வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்பட வேண்டும் என சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை சிறிதாக இருப்பதால் அவர்களைக் கண்டு கொள்வது சிரமமாக உள்ளது. இதனால், இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளை ஒழிக்கமுடியவில்லை எனக்கூறி வந்த சிங்கள அரசாங்கம், தற்பொழுது விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. ஆகையினால், அவர்களைப் பலவீனப்படுத்துவதற்கு இராணுவம் பெரும் தாக்குதல்களை மேற்கொள்ளவேண்டியிருக்கின்றது என்று தெரிவிக்கின்றது.

ஆனால், அன்றிலிருந்து இன்றுவரை இனப்பிரச்சினையில் சிங்கள அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றம் எதுவுமில்லை. 1991 ஆம் ஆண்டின் இறுதியில், வடக்கு - கிழக்குப் போரில் இராணுவத்தினரின் கை ஓங்கியிருப்பதாக இராணுவ அரசியல் வட்டாரங்கள் கருதியபோதும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசாங்கம் முனையவில்லை. அதேபோன்று இவ்வருடத்தில் இராணுவம் பேரிழப்புக்களைச் சந்தித்துள்ள போது அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முன்வரவில்லை.

ஆனால், இவ்வருடத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களையும், பின்னடைவுகளையும் இராணுவத்தரப்பினரும், அரசாங்கமும் உணராமலும் இல்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியப்படாது அரசியற்தீர்வே சாத்தியமானது என வெளிப்படையாகவே அரசியல்வாதிகள் பேசிவருகின்றனர். இதில் அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தோடு, போரினால் நாட்டின் செல்வம்

# தப்பி ஓடிய படையினரை கைது செய்ய பணிப்பு

## இராணுவ உயர்பீடம் விடுத்தது

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து ஓடிச்சென்ற படையினரை உடனடியாக கைதுசெய்து இராணுவ பொலிசாரிடம் ஒப்படைக்குமாறு இராணுவ தலைமை அலுவலகம் மீண்டும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவத்தில் இருந்து மாத்தறை பொலிஸ் பகுதியில் மட்டும் 55 பேர் தப்பி ஓடியுள்ளதாகவும், இவர்களின் பெயர் விபரம் அடங்கிய கோவையை இராணுவ தலைமையலுவலகம் மாத்தறை பொலிசுக்கு அனுப்பி வைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவர்களை உடனடியாக கைது செய்து இராணுவ பொலிசாரிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தலைமையகம் கேட்டுள்ளது.

இவ்வாறு எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் தொடர்பாக முழு விபரங்களும் அனுப்பப்பட்டு வருவதாகவும் இவர்கள் நாட்டை விட்டு வெளியேறாதவாறு விமானநிலையங்களில் கண்காணிக்கப்படுவதாகவும் இராணுவ பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பொலிசாரால் கைது செய்யப்படும் இராணுவத்தினரை சட்டப்படி 24 மணிநேரத்திற்குள் இராணுவத்திடம் ஒப்படைப்பதில் சில நடைமுறைசிக்கல்கள் இருப்பதன் காரணமாக இவ்வாறாக தப்பிஓடும்இராணுவத்தினரை கைதுசெய்ய பொலிசார் தயக்கம் காட்டுவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இணைப்பிற்கு எதிர்ப்போர் வவுனியா செல்ல அச்சம்

## -பிரேமதாசா கவலை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு எதிராகவும், பிரச்சினைக்கு எதிராகவும் உரத்துக் குரல் எழுப்புபவர்களும் ஊர்வலம் நடத்துபவர்களுமான சிலர் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு செல்லவே அஞ்சுகின்றனர், வவுனியாவில் அல்லது கந்தளாயில் பணி புரியுமாறு கேட்கப்பட்டால் பயத்துடனும் பதற்றத்துடனும்காணப்படுகின்றனர். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

கஹாவத்தையில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலையை திறந்து வைத்தபின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில்; நாடு பிரிக்கப்படக் கூடாது என்று உரத்துக் குரலெழுப்பும் இவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிக்கு கடமைக்குச் செல்லச் சொன்னால் பயத்தால் பீடிக்கப்படுகிறார்கள். தமக்குப் பதிலாக வேறு யாரையாவது அனுப்பும்படி அதிகாரிகளிடம் கெஞ்சுகிறார்கள், இங்கு எந்தப் பிரிவினையும் இல்லை என்றால் வடக்குக்குப் பகுதியில் கடமை புரிய ஏன் தயங்க வேண்டும்? இதுதான் உண்மையான நிலை.

கந்தளாய்க்குச்செல்ல மறுக்கும் இத்தகையவர்கள் வவுனியாவில் ஆபத்து இருப்பதாகக் கூறும் இத்தகையவர்கள்தான் கொழும்பில் கூடி நின்று கொண்டு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று கூச்சலிடுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் நானும் அமைச்சர்களும் எமது பாராளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் எல்லாப் பகுதிக்கும் சென்று வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

# பட்டதாரி ஆசிரியர்களின் இடமாற்ற ஏற்பாடு

## -கல்விச் சேவை கமிஷன் செயலளர்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கடமையாற்றும் சுமார் ஆறாயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்தில் இடமாற்றம் வழங்கப்பட இருப்பதாக கல்விச் சேவைகள் கமிஷனின் செயலாளர் ஜோர்ஜ் மென்டிஸ் கூறியுள்ளார்.

பட்டதாரி ஆசிரியர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்து இந்த நடவடிக்கையை தாம் மேற்கொண்டிருப்பதாகவும், 1989-ம் ஆண்டு முதல் தற்காலிக நியமனம் பெற்ற ஆசிரியர்களும் இடமாற்றம் கோரி விண்ணபபிக்கலாமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளுக்கு இவர்கள் இடமாற்றப்படுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# குட்டி உச்சி மாநாடு

(கொழும்பு)

அயோத்தி விவகாரத்தையடுத்து சார்க் நாடுகளின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் அடுத்தவாரம் ஓர் குட்டி உச்சிமாநாடு டாக்காவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது

# சிறிமாவோவின் செயல் சமஷ்டி தீர்வைச்சிதைத்தது

## -பிரெஞ்சு பத்திரிகை கண்டனம்

(கொழும்பு)

''சமஷ்டி ஆட்சி முறைக்கு ஆதரவாக சிங்கள மக்கள் மத்தியில் உருவாக இருந்த முடிவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிதைத்துள்ளார்'' இவ்வாறு பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்று கடந்த 29 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கை ஒன்றாக இணைக்க வேண்டும் என்ற எதிர்வாத தமிழ்க் குழுக்களின் கோரிக்கையை கைவிடச் செய்வதையும் இவர் இல்லாமல் செய்துள்ளார்.

சமஷ்டி ஆட்சியிலிருந்து பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராயும் சமயமே எதிர்க்கட்சித் தலைவியான இவர் இதனை எதிர்த்தார் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

# சமஷ்டி அமைப்பு முறை இணங்கி வாழ வழி செய்யும்

## சுவிஸ் அதிகாரி

''பல்வேறு கலாசாரங்களைக் கொண்டுள்ள நாடுகளில் வெவ்வேறான சமூகங்களுக்கிடையில் அமைதியான முறையில் இணங்கி வாழும் தன்மையை சமஷ்டி அமைப்பு முறையே ஏற்படுத்தும்'' இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் சுவிஸ் அபிவிருத்திமற்றும் கூட்டுறவுக்கான பணிப்பாளர் நாயகம் ஃபிரிட்ஸ் ஸ்ரேஹில்ன் என்பவர் தெரிவித்தார்.

# இன சௌஜன்யம் பற்றி இலங்கையிடம் பயிலலாம்

## அமைச்சர் அஸ்வர்

இன சௌஜன்யம் பற்றி இலங்கையிடம் பாடம் கற்க வேண்டும் என்று முஸ்லிம் கலாசார ராஜாங்க அமைச்சர் அஸ்வர் கூறியுள்ளார். புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; இனங்களுக்கிடையில் சௌஜன்ய உறவு குறித்து இந்தியாவும், ஏனைய நாடுகளும் இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்திய உதவி தேவை

## - காமினிதிசநாயக்கா

(கொழும்பு)

'இந்தியாவின் உதவியும் ஒத்துழைப்பும் இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது'' இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். இதனால் தமிழ் மக்கள் தமது உரிமைகள் பறிக்கப்படுவதாக குரல் கொடுத்தனர். இதன் விளைவாக பண்டா - செல்வா ஒப்பந்தமும் பின்னர் டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டன. இவ்வாறான ஒப்பந்தங்கள் தோல்வியைத்தழுவிக்கொண்டதைத் தொடர்ந்து தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சி பெற ஆரம்பித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# பதவி உயர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சமூகசேவை அலுவலக உத்தியோகஸ்தர்களின் பதவி உயர்வுக்கான பரீட்சை இம்மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

# பாரதீய ஜனதா தலைவர் தொடர்ந்து காவலில்

[டில்லி]

பாரதீயஜனதாக்கட்சிமற்றும் ... வாணி, டாக்டர் முரளி மனோகர் ஜோஷி, செல்வி உமா பாரதி

# நெருக்கடி நிலை பிரகடனம் தற்பொழுது அவசியமில்லை

பிரச்சினையில் சிங்கள அரசாங்கத்தின் அணுகு முறையில் மாற்றம் எதுவுமில்லை. 1991 ஆம் ஆண்டின் இறுதியில், வடக்கு - கிழக்குப் போரில் இராணுவத்தினரின் கை ஓங்கியிருப்பதாக இராணுவ அரசியல் வட்டாரங்கள் கருதியபோதும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசாங்கம் முனையவில்லை. அதேபோன்று இவ்வருடத்தில் இராணுவம் பேரிழப்புக்களைச் சந்தித்துள்ள போது அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முன்வரவில்லை.

ஆனால், இவ்வருடத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களையும், பின்னடைவுகளையும் இராணுவத்தரப்பினரும், அரசாங்கமும் உணராமலும் இல்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியப்படாது அரசியற்தீர்வே சாத்தியமானது என வெளிப்படையாகவே அரசியல்வாதிகள் பேசிவருகின்றனர். இதில் அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இருப்பதாகத் தெரிவதில்லை. அத்தோடு, போரினால் நாட்டின் செல்வம் பெருமளவு விரயமாகின்றது. நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது எனவும் பேசிவருகின்றார்கள். ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றைக்காணக்கூடியதான பேச்சுவார்த்தை எதையும் ஆரம்பிப்பிக்க முயற்சிப்பதாக இல்லை.

இதேவேளை இராணுவத்தரப்பினரும் இவ்வருடம் தொடர்ந்து ஏற்பட்டுவரும் இழப்புக்களினால் மனவுறுதி பெரியளவில் தளர்ந்து போயுள்ளார்கள். சிப்பாய்கள் போரிடும் நிலையில் இல்லை, மனவுறுதி தளர்ந்துள்ளதினால் பெருமளவில் இராணுவத்தில் இருந்து விலகிச் செல்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தரப்பிலும் இவை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டும் வருகின்றது இருப்பினும் இராணுவத்தரப்பில் ஒரு பகுதியினரும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காணவிரும்புவதாகத் தெரியவில்லை. இராணுவத்தை நவீனப்படுத்தி போர்யுத்திகளை மாற்றியமைத்து இராணுவவெற்றி ஒன்றின் மூலம் தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை தோற்கடிக்கவே விரும்புகின்றனர்.

ஆனால், சிங்கள புத்திஜீவிகள் சிலரும், அரசின் ஆலோசகர்கள் சிலரும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதை தற்பொழுது வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர். இதில் சில இராணுவத்தரப்பினரும் அடங்குவர். ஆனால், இவர்களின் இவ் வெளிப்பாடுகள் சிங்கள அரசாங்கத்தை பாதித்ததாகத் தெரியவில்லை. இராணுவத்தீர்வையே அரசு நாடி நிற்கின்றது.

அதாவது, சிங்களப்பேரினவாதம் தோல்விகள் பின்னடைவுகளின மத்தியிலும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதில் இருந்து விலகுவதாக இல்லை. புலிகள் விடுத்த சமாதான அழைப்பை ஏற்றுக்கொள்வதாகவும் இல்லை. நவீன போர்த் தளபாடங்களை கொள்வனவு செய்து போரை விஸ்தரிப்பதிலும், தமிழரின் போராட்டத்தை ஒடுக்குவதிலுமே தீவிரமாக உள்ளது. இந்நிலையில், சிங்களப் பேரினவாதம் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண முற்படுகின்றது என்பதும் அது தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் எனவும்யாரும் எதிர்பார்ப்பார்களேயானால், அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டவர்களாகவே இருப்பார்கள் என்பதில் தப்பில்லை.

---

பட்டதாரி ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்தில் இடமாற்றம் வழங்கப்பட இருப்பதாக

பட்டதாரி ஆசிரியர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்து இந்த நடவடிக்கையை தாம் மேற்கொண்டிருப்பதாகவும், 1989-ம் ஆண்டு முதல் தற்காலிக நியமனம் பெற்ற ஆசிரியர்களும் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கலாமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்

பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளுக்கு இவர்கள் இடமாற்றப்படுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## குட்டி உச்சி மாநாடு

(கொழும்பு)

அயோத்தி விவகாரத்தையடுத்து சார்க் நாடுகளின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் அடுத்தவாரம் ஓர் குட்டி உச்சிமாநாடு டாக்காவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது

---

பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது'' இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். இதனால் தமிழ் மக்கள் தமது உரிமைகள் பறிக்கப்படுவதாக குரல் கொடுத்தனர். இதன் விளைவாக பண்டா - செல்வா ஒப்பந்தமும் பின்னர் டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டன. இவ்வாறான ஒப்பந்தங்கள் தோல்வியைத்தழுவிக்கொண்டதைத் தொடர்ந்து தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சி பெற்று ஆரம்பித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## பதவி உயர்வு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சமூகசேவை அலுவலக உத்தியோகஸ்தர்களின் பதவி உயர்வுக்கான பரீட்சை இம் மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

---

# பாரதீய ஜனதா தலைவர் தொடர்ந்து காவலில்

[டில்லி]

பாரதீயஜனதாக்கட்சிமற்றும் விஷ்வ ஹிந்துப் பரிஷித் தலைவர்களை ஒருகிழமை பொலிஸ் காவலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அயோத்தியிலிருந்து 65 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அக்பர்பூர் என்ற இடத்தில் பூர்வாங்க விசாரணை நடத்தப்பட்ட பின் அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் பூர்வாங்க விசாரணை மாவட்ட நீதிபதி முன்னிலையில் நடத்தப்பட்டது.

பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்களான எல். கே.அத்வானி, டாக்டர் முரளி மனோகர் ஜோசி, செல்வி உமா பாரதி விஷ்வ ஹிந்துப் பரிஷித் தலைவர்களான விஷ்ணு ஹரிடால்மியா. அசோக் சிங்கல் மற்றும் பஜ்ராங்தள் தலைவர் தினேஷ் கதியார் ஆகியோரே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாபர் மசூதியை மீண்டும் கட்டுவதற்கு மத்திய அரசைப் பணிக்கும்படி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டன

உச்ச நீதி மன்றம் நேற்று முன்தினம் இத் தீர்ப்பை வழங்கியது.

# அயோத்தி பிரச்சினை; கொள்கையில் மாற்றமில்லை

## இந்திரா காங்கிரஸ் அறிவிப்பு

(டில்லி)

அயோத்திப் பிரச்சினை தொடர்பாக இதுவரை பின்பற்றிய வழியிலேயே அரசும் கட்சியும் தொடர்ந்தும் செயற்படவேண்டுமென்று காங்கிரஸ் ஐ கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் சமயசார்புடைய சக்திகள் மற்றும் இதையொத்த கருத்துடைய சக்திகளின் ஒத்துழைப்பை நாடுவது என்றும் காங்கிரஸ் ஐ கட்சி முடிவு செய்திருக்கிறது.

மேலும் சமய சார்பின்மைப் பிரச்சினையில் காங்கிரஸ் ஐ கட்சியும இடதுசாரிக்கட்சிகளும் இணைந்து செயற்படுவதை மேற்படி செயற்குழு அங்கீகரித்திருக்கிறது

அத்துடன் இப்பிரச்சினையில் ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்க ஜனதா தள் தலைவர்கள் சிலர் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிற .

அயோத்தியில்

# துணிக்கூடாரத்தின் கீழ் புதிய விக்கிரகங்கள்

(டில்லி)

அயோத்தியில் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்கள் துணிக்கூடாரம் ஒன்றின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இதனைச் சுற்றித் தோள் உயரத்துக்கு செங்கற் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

பொது மக்கள் அங்கு போவதற்கு அனுமதிக்கப்படாத போதிலும் பூசாரிகள் வழக்கம் போல் வழிபாடு செய்து வருகின்றனர்,

இதேவேளை, அயோத்தியில் ஊரடங்கு இரவும் பகலும் தொடர்ந்து அமுலில் இருக்கிறது. 20 000 க்கும் அதிகமான பாதுகாப்புப் படையினர் இரட்டை நகரங்களான பைஸாபாந்தியிலும், அயோத்தியிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# நெருக்கடி நிலை பிரகடனம் தற்பொழுது அவசியமில்லை

## - பி. வி. நரசிம்மராவ் அறிவிப்பு

(டில்லி)

தற்போது நாட்டில் நிகழும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உள்நாட்டு நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்தும் சாத்தியப்பாடு இல்லை என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நாட்டில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டுவருவதே அரசின் முதற்பணியாக இருக்கும் என்றும், மத்திய அரசு 24 மணிநேரமும் தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும், நிலைமை குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் தொலைக்காட்சிக்கு பேட்டி யளிக்கையில் மேலும் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் சிலரின் கைது பற்றிக் குறிப்பிடுகையில், இவர்கள் வகுப்புவாத உணர்வுகளை தட்டி எழுப்பியதாகவும், திரும்ப முடியாத ஒரு இக்கட்டான சூழலிற்கு நாட்டை இட்டுச் சென்றதாகவும் தெரிவித்தார்.

மேலும் அயோத்தியா சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எவரும் அவர் எத்தகைய முக்கிய பிரமுகராக இருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நிலம் கையகப்படுத்திய

# மாநில அரசின் உத்தரவு செல்லுபடியற்றது

## - அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு

(டில்லி)

அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய பாபர் மசூதி வளாகத்திற்கு எதிரே இருக்கும் 2.77 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி மாநில அரசு பிறப்பித்த உத்தரவு செல்லுபடியற்றது என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

நீதிபதிகள் எஸ். பி. மாதூாஸ், எஸ். எஸ். ராஜா, பிரதேஷ்குமார் ஆகியோரைக் கொண்ட விசேட பெஞ்ச் இது தொடர்பாக நேற்றுத் தீர்ப்பளிக்கையில் மேலும், கடந்த ஆண்டில் உத்தரப் பிரதேச அரசு நில ஊர்ஜிதம் செய்தமை சட்டப்படி செல்லுபடியானதல்ல என்றும் தெரிவித்துள்ளனர்.

# கம்யூனிஸ்ட் உதவியை ராவ் கோருகிறார்

(டில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவை பதவி விலகுமாறு தாம் முன்வைத்த கோரிக்கையை கைவிடுவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளன.

அதேவேளை இந்தியாவில் எழுந்துள்ள தேசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரதமர் நரசிம்மராவ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உதவியை நாடியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சாள்ஸ் - டயானா பிரிந்து வாழ்வர்

(லண்டன்)

இளவரசர் சாள்ஸ்சும், இளவரசி டயானாவும் பிரிந்து வாழ உடன்பட்டு இருப்பதாக இங்கிலாந்துப்பிரதமர் ஜோன் மேஜர் அறிவித்துள்ளார்.

பக்கிங்காம் அரண்மனையில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையை மேற்கோள் காட்டி, அவர்கள் விவாகரத்துச் செய்யப்போவதில்லை என்றும், அவர்கள் பிரிவில் அரசியல் சட்ட முக்கியத்துவம் இல்லை என்றும் ஜோன் மேஜர் கூறினார்.

பிள்ளைகள் வளர்ப்பில் இருவரும் சமபங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அயோத்தி விவகாரத்தில் விளக்கமளிக்க

# மத்திய-மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

அயோத்தியாவில், பாபர் மசூதியை மீண்டும் கட்டுவது, மற்றும் மசூதி இடிக்கப்படுவதற்கு காரணமானவர்கள் மீது வழக்குத் தொடுப்பது என்பனவற்றில் மத்திய அரசினதும், உத்தரப் பிரதேச மாநிலத்தினதும் அரசுகள் தத்தமது கருத்துக்களை தெளிவுபடுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்துள்ளது

நீதிபதிகள் வெங்கட செல்லையா, என். என். தே ஆகியோரடங்கிய டிவிஷன் பெஞ்ச் நேற்று முன்தினம் இதற்கான உத்தரவை பிறப்பித்ததோடு பதினெட்டாம் திகதிக்கு முன்பாக விளக்கம் தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈழநாதம்

# ரஷ்ய சட்டமன்றத்தை கலைக்க சர்வசன வாக்கெடுப்பு

## -யெல்சின் கோரிக்கை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இடம்பெற்று வரும் அதிகாரப்போட்டி ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

தனக்கு எதிராக ஒரு சதி நடைபெறுவதாக அவர் கூறுகின்றார். எனவே ரஷ்யாவின் அதி உயர் சட்டமன்றத்தைக் கலைப்பதற்காகச் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் ஜனாதிபதிக்கும், சட்டமன்றத்திற்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் யாப்பு நீதிமன்றம் முயற்சிகளை எடுத்துவருகின்றது.

பொரிஸ் யெல்சினின், சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர்கள்மீது குற்றம் சுமத்தி ஆவேசமான உரையொன்றை நிகழ்த்திய பின்னர் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.

இதனையடுத்துப் பாராளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டது. சீர்திருத்தங்களின் சிற்பியான யோகோஸ் ஹைதரை பிரதம மந்திரியாக ஏறகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுத்தமை தமக்கு ஏற்பட்ட மோசமான தோல்வி என யெல்சின் கருதுகிறார்.

இது தமக்குள்ள அரசியல் சலுகைகளை மறுப்பதாகவும், தமது அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், தமது வரும்காலம் பற்றிய சந்தேகங்களைக் கிளப்புவதாகவும் அவர் கருதுகிறார்.

ஜனவரி 24-ம் திகதி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என அவர் ஆலோசனை கூறியுள்ளார். இந்த அறிவித்தலைவிடுத்த சில மணித்தியாலங்களில் அவர் இதற்குத் தேவையான 10 இலட்சம் கையொப்பங்களைச் சேகரிக்க ஆரம்பித்தார்.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் மாற்று ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவசரமாக ஜனாதிபதி தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும் என்பது பாராளுமன்றஅங்கத்தவர்களின் அபிப்பிராயமாகும்.

எதிர்த்தரப்பினர் யெல்சின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியுள்ளதாகக்குற்றம்சாட்டியுள்ளனர்.

## 3 தீவிரவாத அமைப்புகளின் அலுவலகங்களுக்கு 'சீல்'

(டில்லி)

ஐந்து வகுப்புவாத அமைப்புகளை மத்திய அரசு தடை செய்ததை அடுத்து புதுடில்லியிலுள்ள விஷ்வ ஹிந்து பரிஷத் தலைமையகம், ராஸ்ரிய சேவா சங் பஜ்ரங்கல் அலுவலகங்களுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

விஸ்வ ஹிந்து பரிஷத், ராஸ்ரிய கிராம சேவ சங், பஜ்ரங்கல், இஸ்லாமிய சேவா சங் ஜமேதே இஸ்லாமிய ஹிந் ஆகிய இந்த அமைப்புகளே வகுப்புவாத அமைப்புக்களாக அறிவித்துத் தடை செய்யப்பட்டுள்ளன. பயங்கரவாத நடவடிக்கைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்புக்கள் ஐந்தும் தடை செய்யப்பட்டுள்ளன.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் · JAFFNA MUNICIPAL COUNCIL ·

நூலக ஆலோசகர் பதவி


## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் வீதியில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தவற விட்டவர் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தை

நிகுவதற்கென கொழும்பில் சேகரித்த உடைகள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் பால்மாப் பொருள்களை எடுத்து வரவும் இவர்கள் அனுமதி மறுத்துள்ளனர். இதனால் அகதிகளுக்கென சேகரித்த உடைகளைக் கூட இங்கு எடுத்துவர முடியாத நிலை உருவாகியுள்ளது.

போரூட் நிறுவனம் தமது திட்டப் பகுதிகளுக்கு விநியோகிப்பதற்கென நோர்வே நாட்டிலிருந்து எடுத்து வந்த குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் போசாக்கு உணவு வகைகள் கடந்த ஆறு மாதங்களாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றை எடுத்துவர கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்க தொடர்ந்து மறுக்கு

# "கலவரத்தில் இறந்தோர் தொகை அதிகரிக்கலாம்

(டில்லி)

அயோத்தியாவில்" பாபர் சூதி இந்துத் தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களில் இதுவரை 1000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக கணிப்பிடப்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன:

எனினும் இறந்தோர் தொகை இன்னும் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

மேலும் கலவரங்கள் தற்பொழுது தணிந்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளை

தெரிவிக்கின்றது.

வடக்கு கிழக்கை சேர்ந்த முகமூடி அணிந்த தலையாட்டிகள் மூலம் விடுதலைப் புலிகளை இலகுவாக இனம் காணலாம் என்றும் இதன் மூலம் கொழும்பில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலை தடுக்க முடியும் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அகதிகளுக்கு

க்கு அந்தந்த பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணம் வழங்கும் அடுத்த ஆண்டு தை மாதம் தொடக்கம் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுவரைகாலமும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணப் பொருள்களை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (22)

கலவரம்

பொலிசார் குண்டாந்தடி பிரயோகம் மேற்கொள்ளாதிருந்தால் அன்னையர் முன்னணியின் கூட்டம் நேற்று முந்தினம் மிக அமைதியாக நடந்திருக்கும் என தெரிவித்துள்ளார்.

இதனால் அப்பாவி மக்கள் பலர் பல இன்னலுக்கு உள்ளாகியதுடன் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது மனித உரிமையை மீறும் செயல் என அச்செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

சம்பளம்

ஆனால் திருக்கோணமலையில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கும் திருமலை கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இக் கடன்கள் தொடர்ந்து வழங்கப்படுவதாக கிடைத்த செய்தியை தொடர்ந்து இக் கடன்களை யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கும் வழங்கும் நடவடிக்கையை யாழ். கல்வித்திணைக்

## இசை நாடகம்

யாழ். திருமறைக் கலா மன்றத்தின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான ''வளையாபதி'' இசை நாடகம் நாளை ஞாயிறு காலையும், மாலையும் இருகாட்சிகள் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் மேடை ஏற உள்ளது. (21)

## கிளாலியில் போக்குவரத்து தடை

கிளாலி போக்குவரத்து இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெறவில்லை இதனால் நூற்றுக் கணக்கான பிரயாணிகள் கடந்த மூன்று நாட்களாக ஆலங்கேணிப் பகுதியில் தரித்து நிற்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பங்களாதேஷ் விஜயம்

(டாக்கா)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று பங்களாதேஷ் போய்ச் சேர்ந்தார்.

'சார்க்'உச்சி மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ள போதிலும் சார்க் அமைப்பின் அடுத்த தலைவியாக பதவி ஏற்க இருக்கும் பங்களாதேஷ் பிரதம மந்திரி பேகம் காலிதாஷியாவுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவது இந்த விஜயத்தின் நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

## வேவு விமானம் நோட்டம்

(குருநகர்)

நேற்றுப் பிற்பகல் 3-15 மணியளவில் யாழ்-குடாநாட்டின் சில பகுதிகளைசீ-பிளேன் ஒன்று நோட்டமிட்டுச் சென்றது.

அரியாலை, நல்லூர், நாவற்குழி, கைதடி, நுணாவில், மடுவில் ஆகிய பகுதிகளுக்கு மேலாக மேற்படி சீ-பிளேன் பறந்து வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. (21)

எதிரணி

சிறிலங்கா பொலிசார்மீறினர் என பாராளுமன்ற அவைத் தலைவரிடம் நேற்று முறையிடப்பட்டது.

ஐக்கிய சோசலிச முன்னணி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, சிறிலங்கா சுதந்திரக்

யுனிவேர்ச

ளுக்குச் சில வைக்கப்பட்டுள் ளது.

விஸ்வ ஹிந்து பரிஷத், ராஸ்ரிய கிராம சேவ சங்,

சட்டத்தின் கீழ் இந்த அமைப் புக்கள் ஐந்தும் தடை செய்யப் பட்டுள்ளன.

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## நூலக ஆலோசகர் பதவி

யாழ். மாநகரசபையின் பொதுசன நூலக அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான நூலக ஆலோசகர் ஒருவரது சேவையினைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நூலகவியல் துறையில் சிறப்புத் தகைமையும், அனுபவமும் வாய்ந்த பொருத்தமான விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை 21-12-92-ம் திகதிக்குள் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பகுதி நேரமாகக் கடமையாற்றக்கூடியவர்களும் தயவுசெய்து விண்ணப்பிக்கவும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11-12-1992.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-5577)

---

## நன்றி நவிலல்

## கந்தையா கனகசபை

இணுவில் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கந்தையா கனகசபை அவர்கள் 09-12-92-ல் சிவபதமடைந்தபோது அவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
லிங்கம் ஸ்ரோர்ஸ்,
இணுவில்.

(3778)

---

## மரண அறிவித்தல்

## வல்லிபுரம் சின்னத்துரை

இணுவில் கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்துரை 11-12-92 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் திருமதி மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவலிங்கம் (சிவன் ஸ்ரோர்ஸ், ஓட்டுசுட்டான்), மகேஸ்வரன், யோகராணி சோதிலிங்கம், (ஆசிரியர் மல்லாகம் ம வி.), சச்சிதானந்தம் [ஜேர்மனி], விக்கினேஸ்வரன் [ஜேர்மனி], விமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி, கமலாதேவி, நடேசமூர்த்தி, தேன்மொழி, இராசலட்சுமி, இராசமனோகரி, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 12-12-92 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்நடைபெற்று தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுகொள்ளவும்.

தகவல்: சி, சோதிலிங்கம்
[மகன்]

(3777)

---

...சேகரித்த உடைகள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் பால்மாப் பொருள்களை எடுத்து வரவும் இவர்கள் அனுமதி மறுத்துள்ளனர். இதனால் அகதிகளுக்கென சேகரித்த உடைகளைக் கூட இங்கு எடுத்துவர முடியாத நிலை உருவாகியுள்ளது.

போருட் நிறுவனம் தமது திட்டப் பகுதிகளுக்கு விநியோகிப்பதற்கென நோர்வே நாட்டிலிருந்து எடுத்து வந்த குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் போசாக்கு உணவு வகைகள் கடந்த ஆறு மாதங்களாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றை எடுத்துவர கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்க தொடர்ந்து மறுத்து வருகிறது. இதனால் இப்பால்மா வகைகள் பழுதடையக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இலங்கை முழுவதும் இலவசமாக வழங்கப்படும் திரிபோசா மாவைக்கூட எடுத்துவர அனுமதிக்கப்படவில்லை. இத்திரிபோசா கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்கள்குழந்தைகளுக்கு வழங்குவதற்கென அரசினால் வழங்கப்பட்டுவந்தது தெரிந்ததே. இதனைக் கூட வடபகுதிக்கு அனுப்பி வைக்க அரசு மறுத்து வருகிறது.

இது தொடர்பாக அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இவற்றைஎடுத்துச் செல்வதற்கு எத விததடையும் இல்லை எனஅவ் அதிகாரிகள் பதிலளித்துள்ளனர். ஆனால் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அவற்றை இங்கு எடுத்துவர முயற்சிகள் மேற்கொண்ட போது கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

---

...னார்.

இதனால் அப்பாவி மக்கள் பலர் பல இன்னலுக்கு உள்ளாகியதுடன் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது மனித உரிமையை மீறும் செயல் என அச்செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

### சம்பளம்

ஆனால் திருக்கோணமலையில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கும் திருமலை கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இக் கடன்கள் தொடர்ந்து வழங்கப்படுவதாக கிடைத்த செய்தியை தொடர்ந்து இக் கடன்களை யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கும் வழங்கும் நடவடிக்கையை யாழ். கல்வித்திணைக்களம் மேறகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

### ஆலோசனை

போல பகிஸ்கரித்துவிட்டனர். இதனால் இத் திணைக்களம் சார்ந்த அல்லது இத் திணைக்களத்துடன் தொடர்பு பட்ட பல முக்கிய விவகாரங்கள் குறித்து தகவல்களைப் பெற அல்லது முடிவுகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியதாகவும் அறியவருகின்றது கூட்டத்திற்கு வந்திருந்த திணைக்களப் பிரதிநிதிகளுக்கு தகவல் தெரியாமல் இருந்தது, அல்லது முடிவுகளைக் கூற அதிகாரம் இல்லாமல் இருந்தது எனவும் தெரிய வருகிறது.

இந்நிலை நீண்டகாலமாக தொடர்கிறது. இந்நிலையை மாற்றுவதற்கு சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகள் கடமையை உணர்ந்து செயற்படாதவரை இந்நிலை தொடர்வதை தடுப்பது கடினம் என்று அத்தியாவசிய சேவைகளைச் சீராக்குவதில் அக்கறையுள்ள அதிகாரிகள் பலர் தெரிவித்தனர். (க)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 11.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7060

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்;

28-0427, 24-4390, 24-7340, 24-6154, 41-0535, 26-2668, 26-3351, 26-0786, 27-9626, 26-4393, 24-9758, 40-7207, 26-3784, 27-6821, 24-4457, 40-7584, 28-1049, 26-8071, 26-2585, 42-6170, 41-6544, 26-5302.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்; இல்லை

---

### நோட்டம்

(குருநகர்)

நேற்றுப் பிற்பகல் 3-15 மணியளவில் யாழ்-குடாநாட்டின் சில பகுதிகளைசீ-பிளேன் ஒன்று நோட்டமிட்டுச் சென்றது.

அரியாலை, நல்லூர், நாவற்குழி, கைதடி, நுணாவில், மட்டுவில் ஆகிய பகுதிகளுக்கு மேலாக மேற்படி சீ-பிளேன் பறந்து வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. (21)

### எதிரணி

சிறிலங்கா பொலிசார்மீறினர் என பாராளுமன்ற அவைத் தலைவரிடம் நேற்று முறையிடப்பட்டது.

ஐக்கிய சோசலிச முன்னணி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் நேற்று பாராளுமன்றம் கூடிய போது அங்கு அவைத்தலைவரிடம் மேற்கண்ட முறைப்பாட்டை தெரிவித்தனர்.

### யாழ்.

பரீட்சை நடைபெறும் எனவும் இவர்களுக்கென விசேட வினாத்தாள் தயாரிக்கப்படுவதாகவும் கல்வித்திணைக்களம் தெரிவித்தது இது சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப் பட்டிருந்தது. இம் மாணவர்கள் இப்பரீட்சைக்கு விரைந்து தம்மைத் தயாராக்கிக் கொண்டிருந்த வேளையில் தற்போது ஆண்டு 9 மாணவர்களுக்கு மட்டுமே 17-ம் திகதி இபபரீட்சை நடைபெறவுள்ளதாகவும் ஆண்டு 10இல் கற்கும் மாணவர்களுக்கு நடைபெற மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக திணைக்கள அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது இவர்களுக்கான வினாத்தாள்கள் வரவில்லை என கூறியுள்ளார்.

ஆனால் கடந்த வருடம் ஜூலை மாதம்மாணவர்களிடமிருந்து குறுகியகால அறிவித்தலில் பெறப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் கொழும்பு பரீட்சைத்திணைக்களத்திற்கு இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுவே பரீட்சை இம்முறையும் அம் மாணவர்கள் தோற்றமுடியாத நிலை உருவாகியமைக்குக் காரணம் எனவும் அறியமுடிகிறது.

இதே வேளை 1992 ஆண்டு 9மாணவர்களுக்கு இப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இவர்களுக்கு 17-ம்திகதி பரீட்சை நடைபெறவுள்ளது தெரிந்ததே.

---


ச ல்

புதிய பிரிவுகள்

12-12-92 முதல்

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.